சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. MCOP. 139/2014

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுபாஷ் | தொழில் | இராணுவம் |
| தந்தை பெயர் | பெரியசாமி | ஜாதி | |
| கிராமம் | புதூர் | சமயம் | |
| தாலுக்கா | போளூர் | வயது | |

**13.03.2025 முதல் விசாரணை**

1. நான் 1ம் எதிர்மனுதாரர்ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, TN25AL4217 வாகனத்தின் பதிவுச்சான்று நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.04.2010 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பதாக அசாம் மாநில போக்குவரத்து அலுவலகம் வழங்கிய சான்று அசல் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.08.2023 தேதியிட்ட சி.சி.நம்பர்16/15 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.